தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1972–73-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 64·38 கோடி ரூபாயாகும். இதில் 57·29 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும் ; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில் 64·05 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 33 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காகவும் (Centrally Sponsored Schemes), மத்திய அரசுத் திட்டங்களுக்ககாகவும் (Central Sector Schemes) 8·82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திரும்பக் கிடைத்து விடும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.